MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T106R0

நோயாளி தகவல் கையேடு

# சிறுநீர் கட்டுப்பாடின்மைக்கான மருந்துகள்

## (INCONTINENCE MEDICATIONS)

ஃப்ளவோக்ஸேட் (Flavoxate)
ஆக்சிபியூடினின் (Oxybutynin)
டோல்டெரோடீன் (Tolterodine)

# உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**ஃப்ளவோக்ஸேட் (Flavoxate), ஆக்சிபியூடினின் (Oxybutynin), டோல்டெரோடீன் (Tolterodine) ஆகிய மருந்துகள், அடிக்கடி சிறுநீர் கழித்தல், அவசரமாகக் கழித்தல், அல்லது சிறுநீரை அடக்க முடியாமை போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளாகும். செயற்கை வடிகுழாய் மூலம் சிறுநீர் வெளியேற்றப்படும்போது சிறுநீர்ப்பையில் ஏற்படும் வலிப்புகளுக்கு ஃப்ளவோக்ஸேட் பயன்படுத்தப்படலாம்.**

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருந்து எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

வாய் உலர்தல், மலச்சிக்கல், குமட்டல் மற்றும் வாந்தி, பார்வை மங்குதல், மந்தம் மற்றும் தலைச்சுற்றல் போன்ற பக்க-விளைவுகள் ஏற்படலாம்.

வாய் உலர்வதைத் தவிர்க்க, ஐஸ் கட்டிகள் அல்லது சீனியற்ற மிட்டாய் சப்பலாம்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

உங்களுக்கு இருதய செயலிழப்பு, கிளகோமா, கடுமையான பெருங்குடல் அழற்சி போன்ற மருத்துவப் பிரச்சினைகள் இருந்தால் மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும் ஈ முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

இந்த மருந்துகள் மந்த நிலையையும் பார்வை மங்குதலையும் உண்டாக்கலாம் என்பதால், வாகனம் ஓட்டும்போது அல்லது இயந்திரங்கள் இயக்கும்போது கவனமாக இருங்கள். உங்களின் விழிப்புநிலையைக் குறைக்கக்கூடிய மற்ற மருந்துகளையும் மதுபானங்களையும் தவிருங்கள்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தின் மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.